**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.**

**அசல் வழக்கு எண்.33/2025**

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 03 ம் நாள் புதன்கிழமை திரு/திருமதி.அருள்குமார் என்பவரின் சாட்சியாக வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது ஏற்பாட்டின்படி **திரு.கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,** மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருள்குமார் | தொழில் | : | |
| தந்தை / கணவர் பெயர் | : | தங்கவேல் | வயது | : | |
| கிராமம் | : | | | : | |
| தாலுக்கா | : | | | | |

**வா.சா.1 : முதல் விசாரணை :**

நான் இந்த அசல் வழக்கின் வாதியாவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணமாக கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

10.07.2009 ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் கிரைய ஆவணத்தின் நகல் **வா.சா.ஆ.1**, 10.07.2009 ம் தேதியிட்ட 2ம் வாதியின் பெயரில் கிரைய ஆவணத்தின் நகல் **வா.சா.ஆ.2**, வழக்கு சொத்துக்கள் குறித்த பட்டா நகல் **வா.சா.ஆ.3**, வழக்கு சொத்துக்கள் குறித்த அ பதிவேடு நகல் **வா.சா.ஆ.4**, ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.03 18:25:49 +0530